Registered as a News Paper

பொழிவு: 28
குவிப்பு: 09
பக்கங்கள்:08
விலை: 50/-
புரட்டாதி: 2023

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"



## "ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 42வது ஆண்டுப்பயணம்"

### ஆசிய ஆயர்கள் பேரவையின் கூட்டத்தில் ஆயர் அல்லாத சிறப்புப் பிரதிநிதியாக அருட்கலாநிதி அருளப்பு கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ பங்கேற்றார்.





புரட்டாதி மாதம் 2023, 11 முதல் 15ம் திகதி வரையிலே தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் ஆசிய ஆயர்கள் பேரவையினால் நடாத்தப்பட்ட ஒன்றிணைந்த திருஅவைக்கான உருவாக்கம் குறித்த முதலாவது ஆலோசனைக் கூட்டத்திலே, இலங்கை ஆயர்கள் மாமன்றத்தைப் பிரதிநிதித்து -வப்படுத்த ஆயர் அல்லாத பிரதிநிதியாக எமது மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்கலாநிதி அருளப்பு கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளார் இலங்கை ஆயர்கள் பேரவையினால் தெரிவு செய்யப்பட்டு கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கப் பட்டிருந்தார்.

அங்கு இடம்பெற்ற ஆசிய ஆயர்கள் பேரவையின் இச்சிறப்புக் கூட்டத்திலே 2ம் நாள் அமர்விலே "ஆசியத் திருஅவை ஒன்றிணைந்து பயணிக்கும் திருஅவையாக மாற இன்றைய காலத்திலே நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலைச் சவால்களும் அவற்றை மேற்கொள்ளக் கூடிய ஆசிய வழிமுறைகளும்'' என்ற கருப்பொருளில் ஆங்கிலத்திலே சிறப்புரையாற்றி உள்ளார்.

இதனால் எம் மன்னார் திருஅவையும், இலங்கைத் திருஅவையும் பெருமையுடன் மகிழ்ச்சியடைகின்றது.●

## மரியன்னையோடு நம்பிக்கையின் திருப்பயணிகளாவோம்

### மருதமடு அன்னைக்கு முடிசூட்டியதின் நூற்றாண்டு விழா பற்றி முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களும் அன்னையின் பங்குத் தரிசிப்பு பற்றிய விளங்கங்களும்



1924ம் ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதி பரிசுத்த பாப்பரசர் பதினோராம் பத்திநாதரின் பிரதிநிதியாக வருகைதந்த கொழும்பு பேராயரான அதிவந்தனைக் -குரிய குடேற ஆண்டகை அவர்களால் மருதமடு அன்னைக்கு முடிசூட்டும் நிகழ்வு மிகவும் விமரிசையாக நடைபெற்றது. ஒரு யாத்திரை ஸ்தலத்தின் பாதுகாவலியாகிய மரியன்னைக்கு முடிசூட்டுவதற்கு பாப்பரசரால் கொடுக்கப்படும் அனுமதி என்பது மிக மிக அரிதானது. அப்படி அரிதான ஒரு நிகழ்வை நடாத்தியதன் மூலம் பரிசுத்த பாப்பரசர் இலங்கை நாட்டிற்கு மிகப்பெரிய கௌரவத்தை வழங்கியுள்ளார் என்று மடு வரலாறு பற்றிய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த இம்முடிசூட்டு விழாவில் பாப்பரசரின் பிரதிநிதியாகிய கொழும்பு பேராயருடன் இணைந்து இந்தியா தூத்துக்குடியிலிருந்து வருகை தந்திருந்த அதிவந்தனைக்குரிய திபூசியஸ் றோச் ஆண்டகை அவர்களும். யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய கியோமர் ஆண்டகை அவர்களும், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய றொபிகெஸ் ஆண்டகை அவர்களும், கண்டி மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய பீக்மேயர் ஆண்டகை அவர்களும், 50இற்கு மேற்பட்ட குருக்களும், 150,000 இற்கு மேற்பட்ட இறைமக்களும் கலந்து சிறப்பித்தார்கள். இப்பெருவிழாத் திருப்பலியை யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய கியோமர் ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கி நிறைவேற்றினார். இத்திருப்பலியில் இந்தியா தூத்துக்குடியிலிருந்து வருகை தந்திருந்த அதிவந்தனைக்குரிய றோச் ஆண்டகை அவர்கள் தமிழ் மொழியிலும், பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதியாக வருகை தந்திருந்த கொழும்பு பேராயரான அதிவந்தனைக்குரிய குடேற் ஆண்டகை அவர்கள் சிங்கள மொழியிலும் மறையுரை ஆற்றினார்கள். →06

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் ஆகியோருக்கிடையான சந்திப்பு



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலிசங் அவர்கள் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் கடந்த 25.08.2023 வெள்ளிக்கிழமை அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை அவர்களை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் சமய நல்லிணக்கம், சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதில் மதத்தலைவர்களின் பங்கு மற்றும் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப் பட்டன.

இச்சந்திப்பில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார் அவர்களும் கலந்துகொண்டார்.

தொடர்ந்து அமெரிக்க தூதுவர் அவர்கள் மடுத்திருத் தலத்திற்கு விஜயம் மேற்கொண்டு மடுத்திருத்தல பரிபாலகர் அருட்பணி ஜொய்ஸ் பெப்பி சோசை அடிகளாரையும் சந்தித்தார்.●

## 2024ஆம் ஆண்டை மையப்படுத்திய மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு பற்றிய அறிவித்தல்



மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடானது, 2023 ஒக்டோபர் மாதம் 23, 24, 25 ஆகிய திகதிகளில் மன்னார்மறைமாவட்ட பொதுநிலையினர்கள் மற்றும் குடும்பப் பணிகள் நடுநிலையத்திலே மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையிலே மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழுவின் முன்னெடுப்பிலே இடம்பெறவிருக்கின்றது.

இந்த 2023ஆம் வருடத்தில் இடம்பெறவிருக்கின்ற 2024ஆம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாட்டிலே பங்கு அருட்பணியாளர்கள், துறவற இல்லங்களின் பிரதிநிதிகள், பங்குகளின் பிரதிநிதிகள், ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், மறைமாவட்டத்திலுள்ள துறைசார் வல்லுநர்கள் என்றவாறாக 250 பேர்கள் அளவிலே 03 நாட்கள் இடம்பெறவிருக்கின்ற நிகழ்வுகளிலே கலந்து மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடலை மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் 2025ஆம் ஆண்டானது யூபிலி ஆண்டாக அகில உலகத் திருச்சபையிலே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதைக் குறித்து 2025 யூபிலி ஆண்டை நோக்கிய பயணத்தில் 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' (Jubilee Year 2025: Pilgrims of Hope) எனும் தலைப்பிலே சிந்திக்கவும் அழைப்பு விடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, 2024ஆம் ஆண்டை தயாரிப்புக் காலமாக பிரகடனப்படுத்தி இந்த ஆண்டிலே "செபம்'' என்ற கருப்பொருளிலே சிந்திக்க திருத்தந்தை நம்மை அழைத்து நிற்கிறார். நம் திருத்தந்தையின் அழைப்பை ஏற்று உலகத் திருஅவையோடு இணைந்து எமது மன்னார் மறைமாவட்டமும் 2025 யூபிலி ஆண்டை நோக்கிய தயாரிப்புப் பயணத்திலே, 2024ஆம் ஆண்டின் மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டங்களுக்கான கருப்பொருளாக "செபம்'' என்பதையே முன்னெடுத்துச் செல்லவுள்ளது. இதைக் குறித்த மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டங்கள் பல்வேறு நிலைகளிலே வகுக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வுகள் தூயஆவியின் துணையாலும் வழிப்படுத்தலாலும் வலுவூட்டப் பெற அனைத்து இறைமக்களையும் செபிக்குமாறு வேண்டுகின்றோம்.●

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

**கிறிஸ்து இயேசுவில் அன்பார்ந்த மன்னா வாசகர்களே!**

மீண்டும் ஒருமுறை அனைவரோடும் சேர்ந்து எனது பணி நிறைவில் மன்னா பத்திரிகை பிரசுரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். புரட்டாதி மாதம் என்றால் பல நல்ல நிகழ்வுகளை இன்னும் சில தீமைகள் நடந்த நிகழ்வுகளையும் நாங்கள் காணக்கூடியதாய் இருக்கின்றது. இந்த மாதத்தின் எட்டாம் திகதி அன்னை மரியாள் பிறந்த தினத்தை எண்ணி விழா கொண்டாடி மகிழ்கின்றோம்.

14ம் திகதி மீட்பின் சின்னமாகிய திருச்சிலுவையின் மகிமையின் நாளை கொண்டாடி மகிழ்கின்றோம். அதேவேளையிலே சந்திராயன்-3 நிலாவிலே பல ஆராய்ச்சிகளை மேற்கொள்வதை கண்டு விஞ்ஞானத்தின் வளர்ச்சி இவ்வாறு முன்னேறுவதிலும் மகிழ்ச்சி அடைகின்றோம். உலகிலே பல அழிவுகளும் நடந்து கொண்டிருக்கிறது. அதேவேளை சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் பிரதானமான இரண்டு வர்த்தக மையக் கட்டிடங்கள் விமானத்தால் தாக்கப்பட்டு பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதையும், இந்நாட்களிலே உக்ரைன் ரஷ்யப் போர் தீவிரம் அடைவதையும் காண்கின்றோம். உயிர்கள் மதிக்கப்படாமல் அழிவுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றது.

ஒவ்வொருவரும் தாம் தாம் உணர்ந்து இறைவனை, இயற்கையை மதித்து பிறரை நேசித்து வாழ்ந்தால் மட்டுமே தனிமனித சமூக, நாடு, உலகம் என்று ஆக்கபூர்வமான மாற்றங்களை காணலாம். பகைமையும், போட்டி பொறாமைகளும், அரக்க குணங்களும், அராஜகமும், அரசியல் அடிமைத்தனமும் இருக்கும் போது சமய, சமூக, பொருளாதார, அரசியல் விடுதலையை நாம் எந்த காலமும் காண முடியாது. இந்நாட்களில் நாம் பல்வேறுபட்ட அழிவுகள், கொலைகள், குடிவெறி போதைகள், சமய கிராமிய எதிர்ப்புகள் என்று வாழ்ந்து கொண்டிருப்பதை உணருகின்றோம். மனித அறிவு வளர்ச்சி எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான வளர்ச்சியை அல்லது அழிவு வளர்ச்சியை நோக்கி நகருகின்றது என்று சிந்திக்க தோன்றுகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

அத்தோடு கடந்த 27.07.2021 அன்று பல கடினமான நாட்டின் சூழ்நிலைக் காலங்களிலும் ஆயரின், குருக்களின், இறைமக்களின் உதவியுடனும் வழிகாட்டலுடனும் ஐப்பசி மாதம் வரை பல தடைகளைத் தாண்டி பத்திரிகை பிரசுரிப்பதில் பணியாற்றி மற்றும் கலையருவியின் முக்கிய பணிகளான மன்னா பத்திரிகை ஆசிரியப்பணி, கத்தோலிக்க அச்சகப்பணி, மன்னார் கத்தோலிக்க ஊடகப் பணிகள், கலைஞர்களைக் கொண்டு திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றும் பணி இன்னும் இதர பணிகளை மட்டுப்படுத்தப்பட்ட நிதியோடும், கஸ்ரமான காலங்களிலும் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்போடும் செயலாற்றி வந்தேன். இது என்னுடைய இறுதி மன்னா பத்திரிகை என்ற படியினால் அனைவருக்கும் நன்றிகூற கடமைப்பட்டிருக்-கின்றேன். ஆயர், குருக்கள், துறவிகள், இறைமக்கள், பங்குதந்தையர்கள், மன்னா விநியோகஸ்தர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்கள், உதவியாளர்கள், கலையருவி பணியாளர்கள், கலைஞர்கள், ஊடகப்பிரிவு பணியாளர்கள், பயிலகப் பணியாளர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். நெருக்கடியான காலத்தில் நீங்கள் எல்லோரும் முழு ஒத்துழைப்பை வழங்கியதை இட்டு நன்றி கூறுகின்றேன். உங்களையும், உங்கள் குடும்பங்களையும், பணிகளையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. எல்லாருடைய பணிகள் சிறக்கவும் இறைவனை வேண்டுவோம்.

புதிதாக இயக்குநராக பணிப்பொறுப்பினை ஏற்றிருக்கின்ற அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அருட்பணி. M. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாருக்கு வாழ்த்துக்கள் கூறி அன்போடு வரவேற்று கொள்கின்றேன். இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. மருதமடு தாயார் என்றும் உங்களுக்காக பரிந்துரைப்பாராக.

**என்றும் கிறிஸ்துவில்: அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# மன்னார் மறைமாவட்ட குழுக்களின் புதிய உறுப்பினர்கள்

**ஆயரின் ஆலோசனை மன்றம் (College of Consultors)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி A.விக்ரர் சோசை
அருட்பணி S.ஜொய்ஸ் பெப்பி சோசை
அருட்பணி R.அகஸ்ரின் புஸ்பராஜ்
அருட்பணி S.வசந்தகுமார்
அருட்பணி S.பிரான்சிஸ் மரி டீ கோல்
அருட்பணி A.கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ

**நிதிக்குழு (Finance Committee)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி B. டெஸ்மன் குலாஸ்
அருட்பணி A. விக்ரர் சோசை
அருட்பணி A. மரியதாசன் குரூஸ்
அருட்பணி K. சுகுணறாஜ் குரூஸ்
அருட்பணி G.அருள்றாஜ் குரூஸ்
அருட்பணி R.றெறன்ஸ் குலாஸ்
அருட்பணி L.ஜெஸ்மன்றாஜ்

**குருக்கள் நலன்புரிக்குழு (Priests' Welfare board)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி F.X. றெஜினோல்ட்
அருட்பணி A.ஞானப்பிரகாசம்
அருட்பணி C.அந்தோனிதாஸ் டலிமா
அருட்பணி A. யூட் குரூஸ்
அருட்பணி R. அகஸ்ரின் புஸ்பராஜ்
அருட்பணி A. ஆரோக்கியம்
அருட்பணி S. லக்கோன்ஸ் பிகிறாடோ
அருட்பணி R.றெறன்ஸ்

**மடு உட்கட்டமைப்புக் குழு**
**(Madhu Infra Structure development Committee)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி A.ஞானப்பிரகாசம்
அருட்பணி P. ஜேசுராஜா
அருட்பணி K. டெஸ்மன் குலாஸ்
அருட்பணி S.ஜொய்ஸ் பெப்பி சோசை
அருட்பணி P. பீற்றர் மனோகரன்
அருட்பணி S. மரியதாஸ் லியோண்
அருட்பணி D. அலெக்சாண்டர் சில்வா
அருட்பணி S. இராஜநாயகம்
அருட்பணி V. எமில் எழில்றாஜ்

**மன்னா பத்திரிகை குழு (Manna Paper Committee)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி S.டக்ளஸ் மில்ரன் லோகு
அருட்பணி P.கிறிஸ்து நேசரெட்ணம்
அருட்பணி M.செல்வநாதன் பீரிஸ்
அருட்பணி S. சத்தியறாஜ்
அருட்பணி K. சுகணறாஜ் குரூஸ்
அருட்பணி S.அருட்குமரன்

**சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குழு (Valvuthayam Board)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி T. நவரெட்ணம்
அருட்பணி S. ஸ்ரீபன்ராஜா
அருட்பணி M.ஜெயபாலன்
அருட்பணி S.அன்ரன்
அருட்பணி G.அருள்றாஜ் குரூஸ்
அருட்பணி E. டெனி கலிஸ்ரஸ்
அருட்பணி P. லோறன்ஸ் லியோன்

**மறைமாவட்டக் காணிக்குழு (Land Committee)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி A.விக்ரர் சோசை
அருட்பணி சீமான் மரியதாசன்
அருட்பணி S. ஜெயபாலன்
அருட்பணி J.ஜெஸ்லி ஜெகானந்தன்
அருட்பணி R.றெறன்ஸ் குலாஸ்
அருட்பணி P. லோறன்ஸ் லியோன்
அருட்பணி S. அருண்தாஸ் குரூஸ்

**குருக்கள் மன்றம்**
**பதவி வழி உறுப்புரிமை (EX - Officeo)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி P. பீற்றர் மனோகரன்
அருட்பணி A.ஞானப்பிரகாசம்
அருட்பணி A. யூட் குரூஸ்
அருட்பணி R.அகஸ்ரின் புஸ்பராஜ்
அருட்பணி S.பிரான்சிஸ் மரி டீ கோல்
அருட்பணி S. லக்கோன்ஸ் பிகிறாடோ
அருட்பணி A. ஆரோக்கியம்

**தேர்வு செய்யப்பட்டோர் (Elected)**
அருட்பணி A.விக்ரர் சோசை
அருட்பணி S.வசந்தகுமார்
அருட்பணி A.கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ
அருட்பணி F.யூட் ஞானறாஜ் குரூஸ்
அருட்பணி S.ஜொய்ஸ் பெப்பி சோசை
அருட்பணி M. ஜெயபாலன்
அருட்பணி S. சத்தியறாஜ்
அருட்பணி E. டெனி கலிஸ்ரஸ்
அருட்பணி D. அலெஸ்சாண்டர் சில்வா
அருட்பணி S. டக்ளஸ் மில்ரன் லோகு
அருட்பணி S. அன்ரன்
அருட்பணி T. நவரெட்ணம்
அருட்பணி A.மரியதாசன் குரூஸ்

**ஆயரின் தெரிவு (Nominated)**
அருட்பணி அன்ரனி ஜோசப் IVD
அருட்பணி G.அருள்றாஜ் குரூஸ்
அருட்பணி S. ஜெயபாலன்
அருட்பணி P.கிறிஸ்து நேசரெட்ணம்
அருட்பணி S.அருட்குமரன்

**மடுமாதா வைத்தியசாலை குழு (Hospital Committee)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி A.விக்ரர் சோசை
அருட்பணி L. சுரேந்திரன் றெவ்வல்
அருட்பணி S. அன்ரன்
அருட்பணி G. அருள்றாஜ் குரூஸ்
அருட்பணி S. டக்ளஸ் மில்ரன் லோகு
அருட்பணி S. அன்ரன் தவராஜா
அருட்பணி E. டெஸ்மன் அஞ்சலோ
அருட்பணி L.றொணிஸ் நிமல் வாஸ்

**உருவாக்கற்குழு Formation Commitee**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி L.ஞானாதிக்கம்
அருட்பணி A.ஞானபிரகாசம்
அருட்பணி P.கிறிஸ்து நேசரெட்ணம்
அருட்பணி S.வசந்தகுமார்
அருட்பணி S. நெவின்ஸ் யோகராஜ்
அருட்பணி S. பிரான்சிஸ் அசிசி பீரிஸ்
அருட்பணி A.கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ
அருட்பணி S.அருட்குமரன்

**கட்டிடக்குழு (Building Committee)**
அருட்பணி P.கிறிஸ்துநாயகம் (VG)
அருட்பணி S.எமிலியானூஸ்பிள்ளை
அருட்பணி A.விகரர் சோசை
அருட்பணி S. மாக்கஸ்
அருட்பணி S.சவுல்நாதன்
அருட்பணி F. யூட் ஞானறாஜ் குரூஸ்
அருட்பணி S.சத்தியறாஜ்
அருட்பணி A.மரியதாசன் குரூஸ்
அருட்பணி M.செல்வநாதன் பீரிஸ்

# வாழ்த்தி வரவேற்கின்றோம்



அருட்கலாநிதி
பிரான்சிஸ் மரி டி கோல்
உயர்கல்வி - உரோம்



அருட்கலாநிதி
A. மரியதாசன் குரூஸ்
உயர்கல்வி - உரோம்



அருட்பணி V. எமில் எழில்றாஜ்
உயர்கல்வி - உரோம்
(2 ஆண்டுகள் நிறைவு)



அருட்பணி
S. அருட்குமரன்
உயர்கல்வி - பெல்ஜியம்

## உயர்கல்விக்காக உரோம்



அருட்பணி I. அன்ரனி சோசை அடிகளார் உயர்கல்விக்காக உரோமாபுரி சென்றுள்ளார். மன்னார் மறைமாவட்டம் சார்பாக அருட்பணியாளரை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

# மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி – ஐப்பசி 2023

01. குழந்தைஇயேசு திருவிழா- பறங்கிகமம், பாவிலுப்பட்டான் கட்டி குடியிருப்பு
- புனித கறுப்பு மாதா திருவிழா - மடுறோட்
- புனித செபமாலைஅன்னை திருவிழா - பெரியநீலாசனை
- புனித சதாசகாயஅன்னை திருவிழா - பாவற்குளம், அரச வீட்டுத்திட்டம்

05. இறைஇரக்க ஆண்டவர் திருவிழா - பெரியகமம்
07. புனித செபமாலை அன்னைத்திருவிழா - மணல்மோட்டை, தலைமன்னார் ஸ்ரேசன்
- புனித சகாய மாதா திருவிழா - கந்தபுரம்
- புனித வேளாங்கன்னிமாதா திருவிழா - பெரியபண்டி விரிச்சான், வெற்றிநாயகி கிராமம் (பேசாலை)

08. புனித அடைக்கலஅன்னை - முருகனூர் (கோமரசன்குளம்)
10. குழந்தையேசுவின் சின்னத்திரேசா - முள்ளிக்குளம் (தட்சனாமடு)
- மடுமாதா சிறிய குருமட விழா

14. தேசிய பொதுநிலையினர் ஞாயிறு
15. மன்னார் முன்னைநாள் ஆயர் மேதகு அமரர். இராயப்பு
20. யோசேப்பு ஆண்டகை ஆயராக அபிசேகம் செய்யப்பட்டது (1992)
21. புனித வேளாங்கன்னி திருவிழா-தலைமன்னார்பியர் கடற்கரை
22. உலக மறைபரப்பு தினம்
28. புனித யூதாததேயு திருவிழா - மெனிக்பாம், மடுக்குளம் (பம்பைமடு)
29. புனித அமைதியின் அரசி திருவிழா - முறியாகுளம் (வேப்பங்குளம் பங்குத் திருவிழா)
30. புனித யூதா ததேயு திருவிழா - இரட்டைக்குளம்
31. புனித சதாசகாய மாதா திருவிழா - முதலியார்குளம் (செட்டிகுளம்)

# செய்திகள்

## முதல் நன்மை திருவருட்சாதனம்

### வவுனியா மகாறம்பைக்குளம்பங்கு



வவுனியா மகாறம்பைக்குளம் புனித மடுமாதா ஆலயத்தில் 10 மாணவ மாணவிகளுக்கு முதல் நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு கடந்த 03.09.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் பங்கு ஆலயத்தில் நடைபெற்றது. ●

### மன்னார் குஞ்சுக்குளம்பங்கு



கடந்த 28.08.2023 அன்று குஞ்சுக்குளம் புனித அங்காமத்து மாதா ஆலயத்தில் 19 மாணவ மாணவிகளுக்கு முதல் நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது.●

## கோமரசங்குளம் பங்கின் சிதம்பரபுரம் திருஇருதயநாதர் ஆலய திருவிழா



கடந்த 03.08.2023 கோமரசங்குளம் பங்கின் துணை ஆலயமான சிதம்பரபுரம் திருஇருதயநாதர் ஆலயத் திருவிழா கொண்டாடப்பட்டது இத்திருவிழா திருப்பலி அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி ஜெறாட் அடிகளார் தலைமையில் பங்குத்தந்தை அருட்பணி B.றொசான் அடிகளாரும் இணைந்து இத்திருப்பலியை ஒப்புக்கொடுத்து சிறப்பித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.●

## எழுத்தூர் புனித அடைக்கல அன்னை ஆலய அபிஷேக விழா





எழுத்தூர் பங்கின் புனித அடைக்கல அன்னை ஆலய கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இவ்வாலய திறப்புவிழா கடந்த 27.08.2023 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல. இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களால் புதிய ஆலயம் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி நவரட்ணம் அடிகளார் மற்றும் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளார், குருக்கள் இறைமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ்வாலயத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகி 13வருடங்களின் பின் இவ்வாலயம் கட்டி முடிக்கப் -பட்டுள்ளதுடன் மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பங்குமக்கள் ஆலயக் கட்டுமானப் பணிக்கு நிதிஉதவி வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.●

## உறுதிபூசுதல் திருவருட்சாதன நிகழ்வு காத்தான்குளம் பங்கு



கடந்த 02.09.2023 அன்று காத்தான்குளம் பங்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் இவ்வருட்சாதனத்தை 47 இளைஞர், யுவதிகள் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வுக்கான ஆயத்தப்படுத்தும் பணியை பங்குதந்தை அருட்பணி S. அன்ரன் தவராஜா அடிகளார் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.●

## உயிலங்குளம் புனித இராயப்பர் ஆலய அபிஷேக நிகழ்வு





உயிலங்குளம் பங்கின் புனித இராயப்பல் ஆலயமானது கடந்த 16.07.2023 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி. ல. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் ஆலய அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி மில்ரன் தேவராஜா அடிகளார், இவ்ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டிய அருட்பணி இராஜநாயகம் அடிகளார் மற்றும் ஆலயத்தில் ஆரம்பத்திலிருந்து பணியாற்றிய குருக்கள் மற்றும் வளனார் சபை அருட்சகோதரிகள், பங்குமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.●

## மடு தியான இல்லத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளவை





மடுத்தியான இல்லத்தில் இடம்பெறும் தியான நிகழ்வுகள் மற்றும் கருத்தமர்வுகளில் பங்கெடுத்து தமது ஆன்மீகத்தைப் புதுப்பிக்கவும் மற்றும் மடு யாத்திரிகர்கள் தியான இல்லத்தில் தங்கி இருக்கும் நாட்களில் தமது ஆன்மீகத்திற்கு புதுப்பொலிவு கொடுக்க வாய்ப்பளிக்கும் நோக்கோடு தியான இல்லம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 11 வருட காலத்தில் தியான இல்லத்தில் பற்பல அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இவைகளோடு கூட சென்ற வருட ஆரம்பத்தில் நல்லுள்ளங்களின் உதவியோடு 14 சிலுவைப்பாதை நிலைகள் நிறுவப்பட்டு இறைமக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணை -யாக இருக்கும் அதேவேளையில் இவ்வருட ஆரம்பத்தில் ஏற்கனவே காட்சிப்படுத்தப்பட்டிருந்த திருச்சிலுவை மற்றும் லூர்துஅன்னை கெபிக்கான நடைபாதை அழகுற அமைக்கப் பட்டுள்ளதினால் இறைமக்கள் அதிகம் ஆன்மீகப் பயன்பெற்று வருகின்றனர்.●

## சந்தோமையார் வாசாப்பு புகைப்படங்கள்

### பெரிய பண்டிவிரிச்சான்



### இசைமாலைத்தாழ்வு




**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1600/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

## செய்திகள்

# முதல் நன்மை திருவருட்சாதனம்

### வவுனியா மகாறம்பைக்குளம்பங்கு



வவுனியா மகாறம்பைக்குளம் புனித மடுமாதா ஆலயத்தில் 10 மாணவ மாணவிகளுக்கு முதல் நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு கடந்த 03.09.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் பங்கு ஆலயத்தில் நடைபெற்றது. ●

### மன்னார் குஞ்சுக்குளம்பங்கு



கடந்த 28.08.2023 அன்று குஞ்சுக்குளம் புனித அங்காமத்து மாதா ஆலயத்தில் 19 மாணவ மாணவிகளுக்கு முதல் நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது●

# கோமரசங்குளம் பங்கின் சிதம்பரபுரம் திருஇருதயநாதர் ஆலய திருவிழா



கடந்த 03.08.2023 கோமரசங்குளம் பங்கின் துணை ஆலயமான சிதம்பரபுரம் திருஇருதயநாதர் ஆலயத் திருவிழா கொண்டாடப்பட்டது இத்திருவிழா திருப்பலி அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி ஜெறாட் அடிகளார் தலைமையில் பங்குத்தந்தை அருட்பணி B.றொசான் அடிகளாரும் இணைந்து இத்திருப்பலியை ஒப்புக்கொடுத்து சிறப்பித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.●

# எழுத்தூர் புனித அடைக்கல அன்னை ஆலய அபிஷேக விழா





எழுத்தூர் பங்கின் புனித அடைக்கல அன்னை ஆலய கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இவ்வாலய திறப்புவிழா கடந்த 27.08.2023 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல. இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களால் புதிய ஆலயம் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி நவரட்ணம் அடிகளார் மற்றும் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளார், குருக்கள் இறைமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ்வாலயத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகி 13வருடங்களின் பின் இவ்வாலயம் கட்டி முடிக்கப் -பட்டுள்ளதுடன் மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பங்குமக்கள் ஆலயக் கட்டுமானப் பணிக்கு நிதிஉதவி வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.●

# உறுதிபூசுதல் திருவருட்சாதன நிகழ்வு காத்தான்குளம் பங்கு



கடந்த 02.09.2023 அன்று காத்தான்குளம் பங்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் இவ்வருட்சாதனத்தை 47 இளைஞர், யுவதிகள் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வுக்கான ஆயத்தப்படுத்தும் பணியை பங்குதந்தை அருட்பணி S. அன்ரன் தவராஜா அடிகளார் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.●

# உயிலங்குளம் புனித இராயப்பர் ஆலய அபிஷேக நிகழ்வு





உயிலங்குளம் பங்கின் புனித இராயப்பல் ஆலயமானது கடந்த 16.07.2023 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி. ல. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் ஆலய அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி மில்ரன் தேவராஜா அடிகளார், இவ்ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டிய அருட்பணி இராஜநாயகம் அடிகளார் மற்றும் ஆலயத்தில் ஆரம்பத்திலிருந்து பணியாற்றிய குருக்கள் மற்றும் வளனார் சபை அருட்சகோதரிகள், பங்குமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.●

# மடு தியான இல்லத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளவை



மடுத்தியான இல்லத்தில் இடம்பெறும் தியான நிகழ்வுகள் மற்றும் கருத்தமர்வுகளில் பங்கெடுத்து தமது ஆன்மீகத்தைப் புதுப்பிக்கவும் மற்றும் மடு யாத்திரிகர்கள் தியான இல்லத்தில் தங்கி இருக்கும் நாட்களில் தமது ஆன்மீகத்திற்கு புதுப்பொலிவு கொடுக்க வாய்ப்பளிக்கும் நோக்கோடு தியான இல்லம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 11 வருட காலத்தில் தியான இல்லத்தில் பற்பல அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இவைகளோடு கூட சென்ற வருட ஆரம்பத்தில் நல்லுள்ளங்களின் உதவியோடு 14 சிலுவைப்பாதை நிலைகள் நிறுவப்பட்டு இறைமக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணை -யாக இருக்கும் அதேவேளையில் இவ்வருட ஆரம்பத்தில் ஏற்கனவே காட்சிப்படுத்தப்பட்டிருந்த திருச்சிலுவை மற்றும் லூர்துஅன்னை கெபிக்கான நடைபாதை அழகுற அமைக்கப் பட்டுள்ளதினால் இறைமக்கள் அதிகம் ஆன்மீகப் பயன்பெற்று வருகின்றனர்.●

# சந்தோமையார் வாசாப்பு புகைப்படங்கள்

### பெரிய பண்டிவிரிச்சான்



### இசைமாலைத்தாழ்வு



**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1600/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000.**

**எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

# சிறப்புப் பக்கம்

## மிசறியோ நிதியுதவியுடன் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் ஆவணி மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்

MISEREOR
IHR HILFSWERK

**விவசாயிகளின் களப்பயணம்**

மன்னார் மாவட்டத்தில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவானது விவசாயிகள் குழு ஒன்றை 09.08.2023 புதன் கிழமை மகா இலுப்பள்ளம் விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு களப்பயணமாக அழைத்துச் சென்றுள்ளது. மன்னார் மாவட்டத்தின் வேப்பங்குளம், மடுக்கரை, காத்தான்குளம், பாலப்பெருமாள்கட்டு ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 45 விவசாயிகள் கலந்துகொண்டனர். கூட்டுப்பசளை தயாரித்தல், இயற்கை விவசாயம், புதிய இனவிதைகள், விவசாய ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்கள் என பல்வேறு புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.








**இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சிநெறிகள்**





பாரம்பரிய நெல் உற்பத்தி, பாரம்பரிய விதை உற்பத்தி, கூட்டுப்பசளை தயாரித்தல் முதலான பயிற்சி நெறிகள் விவசாய போதனாசிரியர் திருவாளர். கிருசாந்தன் மற்றும் திருவாளர் சிலுவைராசா ஜோய் அமலசூரியன் அவர்களின் வழிகாட்டலில் வேப்பங்குளம், காத்தான்குளம், மடுக்கரை முதலான இலக்குகிராமங்களில் சிறப்பாக இடம்பெற்றது.●

# இம்மாத புனிதர்கள்

## புனித அன்னை திரேசா

புரட்டாதி 05

"உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு, அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக." (லேவி.19:18) யூகோஸ்லாவியாவில் ஸ்காப்ஜே நகரில் வாழ்ந்த நிக்கோலா மற்றும் திரானா தம்பதியினருக்கு 1910 ஓகஸ்ட் 26 அன்று பிறந்தவர் அன்னை திரேசா. இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கொன்சகா பொஜாக்ஸியு. அவரின் பங்குத்தந்தை, புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை இளைஞர், யுவதிகளை வாசிக்கத் தூண்டினார். மேலும் கல்கத்தாவில் பணியாற்றிய குருக்களின் கடிதங்களையும் வாசிக்கக் கொடுத்தார். இவைகளை மிகுந்த ஆர்வமுடன் வாசித்த ஆக்னஸ் தாமும் இந்தியா சென்று, பணியாற்ற வேண்டும் என்று உந்துதல் பெற்றார். அன்புடன் மறுத்த தாய் மற்றும் அண்ணனின் சம்மதம் பெற்று லொரேட்டோ மடம் சென்றார். அங்கு பயிற்சிபெற்ற பின் கல்கத்தா நோக்கி புறப்பட்டார்.



சிறுமலர் தெரசாவின் 'ஓர் ஆன்மாவின் வரலாறு' படித்து அவர் மீது பற்றுக்கொண்ட ஆக்னஸ் தனது பெயரையும் திரேசா என்று மாற்றினார். 1931 மே 24இல் முதல் வார்த்தைப்பாட்டையும், 1937 மே 14இல் நித்திய வார்த்தைப்பாட்டையும் கொடுத்தார். கல்கத்தாவிலுள்ள புனித மரியா பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். கல்கத்தா சேரிகளில் மக்கள் படும்பாட்டையும், மதக்கலவரங்களின் போதும் மதிக்கப் படாத உயிர்களை கண்ட திரேசா அவர்களுக்காகப் பணியாற்ற முடிவு செய்தார். அவரது ஞானஒடுக்கத்தின் போது இந்த எண்ணம் ஆழப்பட்டது. இம்மக்களுக்காகத் தனியான சபையை ஆரம்பித்து, பணியாற்ற இறைவன் தன்னை அழைக்கின்றார் என்பதை அருட்தந்தை வான் எக்சம் மற்றும் அவர் வழியாக பேராயர் பெரியர் ஆகியோரிடம் தெரியப்படுத்தினார். மிகுந்த எதிர்ப்பு மற்றும் மறுப்புக்கு மத்தியில் தமது இத்திட்டத்தை நிறைவேற்றினார்.

வத்திக்கானின் அனுமதியுடன் 1948இல் புனித அன்னை திரேசா மோட்டிஜில் சேரியில் பணியை ஆரம்பித்தார். இவருடைய மாணவிகள் ஆக்னஸ் மற்றும் ஹெர்ட்ரூட் ஆரம்பத்தில் இவருடன் சேர்ந்து அருட்சகோதரிகளாகி பணியாற்றத் தொடங்கினார்கள். அன்பின் பணியாளர் சபையை 1950இல் திருத்தந்தை அங்கீகரித்தார். சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த அன்னை திரேசா 'நல்மரண இல்லம்' ஒன்றை ஆரம்பித்தார். "என் இயக்கத்திலேயே மிக அழகான பணி இந்த இறப்போர் 'நல்மரண இல்லம்' தான். காரணம் "இறக்கும் மனிதரிடத்தில் இறைவனைப் பார்க்கின்றேன்" என்றார். தொழுநோயாளர் இல்லம், மற்றும் குழந்தைகள் காப்பகம் அமைத்தார். "தியாகமில்லாத வாழ்க்கை சூன்யம். மனதில் சில கவலைகளின் சுமைகளைத் தாங்க முடியாத போது, இந்த மழலைகளைப் பார்த்துத் தான் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்றார். இந்தப் பணிகளுடன் கல்விப் பணி என்னும் அறப்பணியையும் மேற்கொண்டார்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் இரக்கக் கரம் விரித்த அன்னை சந்தித்த சவால்கள் கொஞ்ச நஞ்சமல்ல. "ஒடுக்கப்பட்டோருக்கும், அன்பு செய்யப்படாதவருக்கும் அன்பையும் இரக்கத்தையும் கொடுக் கின்றோம்" "துன்புறும் ஏழைகளுக்கு நாங்கள் செய்யும் சேவை கடவுள் இவர்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை வெளிப்படுத்தும்". என்றார். மக்களின் மனங்களில் இறைவனின் கருணையைப் பரப்பிய அன்னை திரேசா, 1997 செப்ரம்பர் ஐந்து அன்று விண்ணகப் பிறப்படைந்தார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், 2003, ஒக்ரோபர் 19 அன்று அருளாளராக உயர்த்தினார்.●

## புனித ஜனுவாரியுஸ்

புரட்டாதி 19



இவர் பெனவந்தம் நகரின் ஆயராக நியமனம் பெற்றார். அக்காலத்தில் தியோக்ளியன் நடத்திய வேதகலகத்தில் கிறிஸ்தவர்களும் குருக்களும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதை இவர் அறிந்து அவர்களைச் சந்தித்து ஆறுதல் சொல்லும்படி சிறைச்சாலைக்குச் சென்றார். இதையறிந்த கொடுங்கோல் மன்னன் இவரைச் சிறைப்படுத்தி மறையை மறுதலிக்கக் கட்டாயப்படுத்திய போது, இவர் சிறிதும் உடன்படவில்லை. உடனே நெருப்பில் போட்டு எரிக்க ஆணையிட்டான். நெருப்பு இவரைச் சிறிதும் சுடவில்லை. கொடிய விலங்குகளுக்கு இரையாக போட்டான். அவைகளும் இவருக்குத் தீங்கு இழைக்கவில்லை. இவறைப் பார்த்து மனந்திரும்பியவர்கள் பலர்.

பின்னர் இவரது தலையை வெட்டிக்கொல்லக் கட்டளையிட்டான். இவரது தலையும், இரத்தம் அடங்கிய இரு பளிங்குக் குப்பிகளும் இன்று வரையில் நெப்பிள்ஸ் நகரப் பேராலயத்தில் புனிதமாய் வைக்கப்பட்டுள்ளன. அங்கே ஏராளமான புதுமைகள் நடைபெற்று வருகின்றன. இறுக உறைந்திருக்கும் இவருடைய இரத்தம் அடங்கிய குப்பிகளை இவரது தலையின் அருகே கொண்டு போகும்போது, இரத்தம் இளகிக் கரைந்து சிவப்பு நிறமாகிக் கொதிப்பதுபோல் காணப்படும். இந்தப் புதுமை நிகழ்ச்சி கி.பி 14வது நூற்றாண்டு முதல் ஆண்டுதோறும் இவரது திருநாளன்று நடந்தேறி வருகிறது. இது நிகழாத போது எல்லாம், அந்த நாட்டிற்கு அலுகிலுள்ள வெசுவியஸ் எரிமலையினால் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகின்றனர்.●

## திருச்சிலுவையின் மகிமை

புரட்டாதி 14

சிலுவையின் வெற்றி விழா, திருச்சபையின் ஆரம்பக் காலம் முதலே விசுவாசிகளால் கொண்டாடப்பட்டு வந்தது. இயேசுவின் உடலை சிலுவையில் இருந்து எடுத்தவுடன் அவரைப் பின்பற்று -கிறவர்களின் கண்ணுக்கு அது கிடைத்துவிடக் கூடாதென்று நினைத்த ஆட்சியாளர்கள் அதனை கிணற்றில் போட்டு, அதன் மேல் மண் மற்றும் கற்களைப் போட்டு மூடி விட்டார்கள்.

312இல் உரோமையின் பேரரசருக்குப் போட்டி வந்தபோது கொன்சன்ரைன் தம் செபத்திற்குப் பதில் மொழியாக வானில் ஒளிரும் சிலுவை அடையாளத்தைக் கண்டார். அதில், "இந்த அடையாளத்தின் வழியாக நீ வெற்றி கொள்வாய்" என்று எழுதி இருந்தது. இதனையடுத்து 312 அக்டோபர் 28 அன்று மில்வியன் பாலத்தில் கான்ஸ்டன்டைன் போரில் வெற்றிபெற்றார். இதன்மூலம் "கிறிஸ்தவத்தின் அடையாளமான இந்த சிலுவை உரோமையின் அடையாளமாகவும், போர் வீரர்களின் கவசத்திலும் பொறிக்கப் பட வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

புனித ஹெலினா 326 செப்டம்பர் 14 அன்று எருசலேமில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உண்மையான சிலுவையை கண்டெடுத்தார். அதனை கொண்டாடும் விதமாக கல்வாரியில் இரண்டு ஆலயங்கள் எழுப்பினார். அதுமுதல் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா மே 03ம் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. உண்மைச் சிலுவையின் ஒருபகுதி எருசலேமில் வைக்கப்பட்டது. 614இல் பெர்சியா அரசன் இரண்டாம் சொஸ்ரோஸ் சிரியா மற்றும் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினான். பல்வேறு பொக்கிசங்களை எருசலேமில் இருந்து கவர்ந்து சென்றான். உண்மையான திருச்சிலுவையின் பகுதியையும் ஈரானுக்கு எடுத்துச் சென்று விட்டான்.

கொன்ஸ்தாந்திநோபிள் பேரரசர் ஹெராக்ளியஸ் 629இல் பெர்சியா மீது படையெடுத்து உண்மைச் சிலுவையை கண்டு பிடித்தார். மிகுந்த பக்தியுடன், சாக்குஉடை அணிந்து, வெறுங் காலுடன் நடந்து அதனை எருசலேமிற்கு கொண்டுவந்தார். செப்டம்பர் 14இல் எருசலேமிலுள்ள திருச்சிலுவை ஆலயத்தில் வைத்து மகிமைப்படுத்தினர். இந்த வெற்றியை நினைவுகூரும் விதமாக ஏழாம் நூற்றாண்டு முதல் செப்டம்பர் 14ஆம் தேதியில் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழாவைத் திருச்சபை கொண்டாடி மகிழ்கிறது. இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. அவரது இறப்பின் பின்னர் அது பேரின்பத்தின், ஒளியின், நல்லிணக்கத்தின் சின்னமாகியது.●

# கவிதைக்களம்

## இளைய சமுதாயமே!!

இறைபற்றில்லா இளைய சமுதாயமே!
இன்பம் காண ஆசைகொண்டு - இறைவனை "மறவாதே"
இறைபதம் பணிவாயே!
இறை சித்தம் உணர்ந்து - இறையழைத்தல் பெருகிட
இதயத்தில் உனக்கு இறை விசுவாசம் இல்லையோ?
சற்று நீ எண்ணி பார்ப்பாயே!
குவிந்து கிடக்கும் உலக மாயைகளில் இருந்து
வெளியே நீ வருவாயே!
ஆன்மீகம் என்றாலே — "ஐயையோ" என்கிறாய்
ஆண்டவரை காண ஏனோ மறுக்கிறாய்
அன்புள்ளம் உன்னிடம் இல்லை
அன்னை தந்தையை மதிப்பதுமில்லை
ஆண்டவர்க்காய் உன்னை — அர்ப்பணிப்பதும் இல்லை
ஆண்டவரை நாடி தேடுவதும் இல்லை
போதையில் நீ மிதக்கிறாய் - இறை போதனையை
ஏனோ வெறுக்கிறாய்
இருண்டல்லவா? கிடக்கின்றது உன் வாழ்க்கை
இத்தனையும் அறிவாயோ?
தேவ அழைத்தல்கள் பெருகிடவே திருச்சபையும் - உன்னை
தேடித்தான் இறைவேண்டல் செய்கின்றதே
எண்ணி நீ பார்ப்பாயே! இறைபதம் வருவாயே!
காலங்கள் மாறினாலும் அன்புள்ளம் கொண்டவர் - நம் இறைவன்
உருக்குலைந்த வாழ்விற்கும் புத்துயிர் அளிப்பவர் - நம் இறைவன்
ஒளி தரும் ஊற்றும் அவரே — உன்னத தெய்வமும் அவரே
எந்த இடத்தில் உன்னை வேண்டாம் என்று — ஒதுக்கி வைக்கிறார்களோ
அதே இடத்தில் இறைவன் உன்னை செதுக்கி — உயர்த்தி வைப்பார்
உணர்ந்து நீ மனமாற்றம் பெற்று மகிழ்வுடன் இறைபதம் தொழுவாயே
இறைபணி தொடர்வாயே இளையோரே!

P. அன்ரனி குரூஸ் சரன்சலாமேரி
துட்டுவாகை, நேரியகுளம்

## துறவறம்

துள்ளித்திரியும் பருவத்திலே இறைவன் தந்த பிள்ளையை
இறைவனின் பிள்ளை என எண்ணி இறைவனுக்காக
கொடுப்பது துறவறம்...

இளமைப் பருவம் பாராது பள்ளியிலே தோன்றி
வாழ்க்கையை சிந்தித்துப் பாராது வாழ்க்கையையே
இறைவனுக்காக கொடுப்பது துறவறம்...

யார் என்ன சொன்னாலும் கேளாது தனது எண்ணத்தை
மாற்றாது இறைவனுக்காக தனது வாழ்வை
அர்ப்பணிப்பதுதான் துறவறம்...

இறைவன் தந்த வாழ்வை உதாசீனப்படுத்தாது இறைவனை
கூவி அழைத்து இறைவனின் அழைப்பை
ஏற்று வாழ்வது துறவறம்...

கல்லும் முள்ளும் காயமும் கஸ்டமும் வாழ்வும் சாவும்
நன்மையே தீமையே எனினும்
எம்மை மாற்றாதது துறவறம்...

S. டினோசினி
தரம் 11, மானங்கவெளி.

## வெற்றியின் இரகசியம்

புத்தகங்களை துணைக்கென
உடலுழைப்பை அதிகரி
குளிர்நீரில் குளி, கொஞ்சமாய் சாப்பிடு
இரவு உறங்கும் முன் நெடுந்தொலைவு நட...
உணவில் கீரையை சேர்த்துக்கொள்
எத்தனை வலித்தாலும் அழாதே... சிரி
ஆத்திரம் அகற்று
கேலிக்கு புன்னகை தா...
கோபத்திற்கு மௌனத்தை கொடு
அலட்சியப்படுத்தினால் விலகி நில்...
அன்பு செய்தால்
நன்றி சொல்
இதமாகப் பேசு...

S. டல்சினி,
தரம் 05, மானங்கவெளி



# சிலுவை நமது சின்னம்

**சிலுவை நமது சின்னம்**
**அது நமது அடையாளம்**

சிலுவையையும் சிறிஸ்துவையும் பிரிக்க முடியாது கிறிஸ்தவனும் சிலுவையோடு பிணைக்கப்பட்டிருக்கிறான். திருமுழுக்கின் போது நெற்றியில் சிலுவை அடையாளம் வரைந்து திரு அவைக்குள் வரவேற்கப்படுகின்றோம். இறுதிப் பயணத்தின் போது சிலுவை அடையாளமிட்டு வழியனுப்பி வைக்கப்படுகின்றோம். "அர்ச்சிய சிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே" என்கின்ற செபம் இப்போது சொல்லப்படுவது குறைந்து விட்டது. ஒருவருக்கு நமது ஆசியை வழங்கும் போது நெற்றியில் சிலுவை வரைந்து அவர்களை ஆசிர்வதிப்பது சிறந்த வழக்கம். எந்தக் காரியத்தையும் சிலுவை அடையாளமிட்டே தொடங்கினார்கள் நம் மூத்தவர்கள். சிலுவையை முன்னிலைப்படுத்தி அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நாமும் பின்பற்றி வாழ்வோம் நமது இல்லங்களிலே திருச்சிலுவை கட்டாயம் இருக்கவேண்டும். சிலுவை நமது சின்னம் அது நமது அடையாளம்.

**ஜெயாபாலாஜி**
**முருங்கன்.**

## அறிந்துகொள்வதும் தெரிந்து கொள்வோம்

ஆடை என்பது மானம்
பணம் என்பது தேவை
ஆங்கிலம் என்பது மொழி
தமிழ் என்பது உயிர்
அம்மா என்பது பாசம்
அப்பா என்பது ஆசான்
ஆனந்தம் என்பது ஆயுள்
சினம் என்பது நோய்
துன்பம் என்பது பரீட்சை
தோல்வி என்பது பாடம்
வெற்றி என்பது தற்காலிகம்
நட்பு என்பது இளமை
குடும்பம் என்பது வாழ்க்கை
எண்ணம் என்பது சிந்தனை
உலகம் என்பது மாயை
நாள் என்பது அறியாமை ~ இதை
உணர்ந்து கொள்பவன் எவனோ
அவன் தான் மனிதன்

A. நாதன், வதனா
வாழ்க்கைப்பெற்றான்கண்டல்

## அன்னை தெரேசா



அல்பேனி நாட்டின் இளமங்கை
அல்லல் தீர்க்க வந்தாரே!
கொல்கத் தாவின் வீதியிலே
கொடிய துன்பம் கண்டாரே!
நல்ல மனத்தால் நட்பானார்
ஞானம் நிறைந்த அருட்கன்னி
வல்ல தேவன் வழிதன்னில்
வாகை சூடி மகிழ்ந்தாரே!

கருணை ஒளிக்குப் பணிபுரிந்த
கடமை அன்னை தெரெசாவே
இருளின் பிடியை நீக்கவந்த
இதயம் கொண்ட பெண்மணியாம்!
கருவில் தேர்ந்த காருண்யன்
கதியைத் தொடர்ந்த நன்மாதாம்!
அருளை நிறைவாய்க் கண்டுவந்த
அன்பின் கன்னி வணங்குகிறேன்!

ஏழை உருவில் இறைவனையே
எழிலாய்க் கண்ட நன்மங்கை
வாழை அடிபோல் வளர்ந்துயர்ந்த
மக்கள் அன்புக் கன்னியர்கள்
ஊழை நோகும் மாந்தரிடை
உண்மை அறத்தைப் புரிந்தாலே
கோழை மனத்தைப் போக்கிடவே
குன்றா வுதவி செய்வாயே!

பாவலர் திருமகள்

## பரிசுத்த தாய் மாமரித்தாய்

உனக்கும் எனக்கும் தாய் - அவர்தான்.
மாமரித்தாய் மண்ணுலகின் - தாய்
மாமரியை முன்மாதிரியாய் ஏற்று வாழ்ந்து - விடு
மீண்டும் வாழ்வடைவாய் வாழ்வினிலே.
எம்மில் பிரிவினை அகற்றிவிடு
பிரிந்த சபை என்று கூறி பிரித்து நீயும் சொல்லாதே
நீ உதிர்க்கும் வார்த்தைகள் உன் உதடு
வந்து சேர்வதில்லை ஆனால் - அது
செவிகளை வந்து சேர்ந்து விடும் மறவாதே!
வாய்ப்பு கிடைத்ததென்று
வாய்க்கு வந்ததையும் கூறுகின்றாய்
கர்த்தரைத் தொலைத்தாய்
என்னை எப்படி வழிநடத்திடுவாள் என்கிறாய்
கடவுளின் திட்டம் அறிந்தவனா - நீ
சீடரைப் பெருமைப்படுத்துகின்றாய்
சீராட்டி வளர்த்த தாயை வெறுக்கின்றாய்
தாயின்றிப் பிறந்தவனா - நீ
உயிரளிப்பவர் உன்னதராய் இருந்தாலும்
தாயின் கருணையின்றி மனிதனாய்
தரணியில் யாரும் பிறந்ததில்லை
மறவாதே மானிடனே!
உன்னதரை உடனிருந்து வழிநடத்திய - தாய்
உன்னையும் வழிநடத்துவாள் மறவாதே!
விண்ணுக்கும் மண்ணுக்கும் - தாய்
அன்றும் என்றும் இன்றும் ஒரே - தாய்
பரிசுத்த தாய் மாமரித்தாய் மண்ணுலகின் - தாய்

**அலோசியஸ் ஜெயநாயகம் நோயல் டானியல்,**
**காத்தான் குளம், வட்டகண்டல்.**

## அன்பின் மறுபெயர் அன்னை தெரேசா

அல்பேனி நாடுதந்த அன்பின் பெண்மை
அறப்பணிக்கே தனையளித்த அன்னை தெரெசா
கல்கத்தா நகரவீதி யெங்கும் சென்றார்
கருணையினால் ஏழைகளை அணைத்த கன்னி
இல்லாமை யெனும்பேயை அகற்ற வெண்ணி
இரந்துநின்ற மகராசி புகழே வாழ்க
பொல்லாத மனத்தையுமே மாற்றி நின்ற
புனிதவதி அரும்பணிகள் நிலைத்து வாழ்க

தனித்துநின்றே சேவைசெய்ய வந்த செம்மல்
தன்னிகரில் லாதபணியால் உயர்ந்து நின்றாள்
இனிதுவக்கும் பார்வையினால் இன்னல் நீக்க
எண்ணில்லா மங்கையரை ஈர்த்து நின்றாள்
கனிவுடனே இணைந்தவர்கள் மகிழ்ச்சி பொங்கக்
கருணையில்லம் அமைத்தனரே ஒன்று சேர்ந்து
மனிதமிங்கே மாண்படையச் செய்த தொண்டு
மகிழ்வுடனே உலகெங்கும் சிறந்தே ஓங்கும்

கண்மணியே கலங்காதே அணைக்கும் தாய்மை
கருவினிலே மறந்தாலும் அன்பின் மங்கை
கண்விழித்துக் காத்திடுவாள் கவனங் கொண்டே
கலங்கிடாதே உன்துன்பம் விலக்கி வைப்பாள்
மண்ணிலேநீ வந்தகாலம் கண்ட தீமை
மரணித்த மானிடமே எழுந்த உண்மை
விண்ணதிலே மகிமைபெற்ற புனிதை நீயே
மண்ணவர்க்காய் வேண்டிடுவாய் அம்மா தாயே!

றூபா அன்ரன் — சுவிற்சர்லாந்து

## சிறப்புப் பக்கம்

# ஊடகப் பெருவழியில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம்

ஜெயக்காந்தன் கனிஷ்ரா
ஊடகக்கற்கைகள் துறை, யாழ் பல்கலைக்கழகம்.

இன்றைய உலகில் இயற்கைக்கு மாறாக அனைத்தும் செயற்கையாக நாளுக்கு நாள் உருவாக்கி உருவாக்கப்பட்டு கொண்டே இருக்கின்றது. அந்த வகையில் ஊடகத்துறையிலும் கூட பல வளர்ச்சிகள் முன்னேற்றங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஊடகத்துறையில் அனைவரையும் அதிர்ச்சி அடைய செய்த ஓர் விடயமாக செயற்கை நுண்ணறிவு (AI ) Artificial Intelligence காணப்படுகின்றது.

ஊடக வழியில் குறிப்பாக செய்திகள், பொழுதுபோக்குகள் ,மகிழ்வூட்டுதல் போன்ற அனைத்து செயல்பாடுகளிலும் இந்த நுண்ணறிவின் செயற்பாடு மிகத் துரிதமாக நுழைந்துவிட்டது. காலத்தின் தேவை கருதி இந்த செயற்கை நுண்ணறிவும் பல புதிய முன்னேற்றங்களையும், புதிய விடயங்களையும் ஊடகப்பெருவழிக்குள் உள்வாங்குவதற்கு மிகப் பெரும் சாதனமாக இது அமைகிறது.

ஒரு நபர்கள் அதிகமாக எதை தேடுகின்றார்கள் ,பார்க்கின்றார்கள் எதைப்பற்றியும் அதிகம் உரையாடுகிறார்கள் என்பதை எமக்குத் தெரியாமலே எமது கைத்தொலைபேசிகள் தகவல்களைப் பெற்று அது சார்ந்த தகவல்களை எமக்கு அதிகமாக காண்பிக்கின்றன. அதுமட்டுமன்றி தரவுகளை தகவல்களாக மாற்றி சேகரிக்கும் செயல்முறையிலும் செயற்கை நுண்ணறிவின் செயல்பாடுகள் அதிகமாக உள் நுழைந்துவிட்டன. அதாவது நிரல்மொழிகள் (Algorithms) வழியாக தகவல்களை சேகரிக்கும் செயல்முறையாக இன்று தொடர்பாடல் செயல்முறை மாறிவிட்டது .

Facebook, Twitter, You Tube போன்றவற்றின் முறைப்பாட்டினை செய்யும் போது கூட அதனை பரிசீலனை செய்யும் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு இந்த செயற்கை நுண்ணறிவு உதவி செய்கின்றது. காட்சி வழியான வீடியோ பதிவுகளுக்கான உபதலைப்புகளை தருவதற்கும் ,திரைப்படம், சின்னத்திரை போன்றவற்றிற்கான உபதலைப்புகளை இடுவதற்கும் செயற்கை நுண்ணறிவு சாத்தியமாகி விட்டது.

அதேபோல மனிதர்களைப் போன்று அன்றாடம் தொலைக்காட்சிகளில் செய்தி வாசிப்பதற்கும் செயற்கை நுண்ணறிவுகள் வந்துவிட்டன. அது மாத்திரமன்றி எமக்கு




தேவையான தகவல்கள் எங்கிருந்தாலும் அதனைப் பெற்றுத் தரக்கூடிய வகையில ˙Chatgbt போன்ற செயல்களும் உருவாக்கப்பட்டு விட்டன.

ஊடகங்களுக்கும் , ஊடகவியலாளர்களுக்கும் தேவையான தகவல்களை பரிந்துரை செய்யும் வண்ணம் செயற்கை நுண்ணறிவின் பால்இயங்கும் Bloomberg போன்ற தரவு கட்டமைப்புகள் இன்று பிரபலயம் பெற்று விட்டன.

இவ்வாறான நிலையில் ஒரு நாணயத்தின் இருபக்கம் போல பல சாதகமான செயற்பாடுகளை ஊடகப் பெருவழியில் செயற்கை நுண்ணறிவு ஆற்றினாலும் அதற்கு எதிரான பாதகமான மறுபக்கம் காணப்படுவதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனிதர்கள் செய்யும் பல செயற்பாடுகளை செயற்கை நுண்ணறிவு ஆற்றுவதால் பல மனிதர்கள் தமது தொழில் நிலைமையை தக்க வைப்பது கேள்விக்குறியான ஒரு விடயமாக மாறிவிட்டது . செயற்கை நுண்ணறிவின் காரணமாக திட்டமிட்ட வகையில் போலி செய்திகள் பரப்பப்படுவதன் காரணமாக பல பாதகமான விளைவுகளை சந்திக்க வேண்டிய துப்பாக்கிய நிலை ,இந்த சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது .

மேலும் ஒரு தனிப்பட்ட நபரின் சிந்தனைகளை சுருக்கி ஓர் ஆபத்தான விடயமாக இந்த செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகள் மாறிவிட்டன . இவ்வாறு செயற்கை நுண்ணறிவு இணைய வழி பாதுகாப்பிலும் , கண்காணிப்பிலும் அதிகம் பயன்படுத்தப்பட்டாலும் இணையவழியினால் தகவல் திருடப்படுவதாலும் ,போலியான தகவல் ,பரப்பப்படுவதனாலும் தினம் பல குற்ற செயல்கள் எம் சமூகத்தில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன .

தொழில்நுட்பமும், இணையமும் வளர்ச்சிபெற்ற தற்கால சூழலில் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக மாறிவரும் தற்கால சூழலில் இவ்வாறான செயற்கை நுண்ணறிவின் நாம் தவிர்த்துக்கொள்ள முடியாது. ஆனால் இவ்வாறான செயற்கை நுண்ணறிவு தொடர்பான சாதக,பாதகங்களை அறிந்து முழுமையான ஒரு விழிப்புணர்வுள்ள அறிவுடன் அவற்றை அணுகுவோமாக இருந்தால் செயற்கை நுண்ணறிவினால் ஏற்படும் பல பிரச்சனைகளில் இருந்து அனைவரையும பாதுகாத்து கொள்ளலாம்.●

---

**1ம் பக்கத் தொடர்ச்சி**

**மரியன்னையோடு நம்பிக்கையின்...**

**இலட்சக்கணக்கான மக்கள் புடைசூழ பரிசுத்த பாப்பரசர் பதினோராம் பத்திநாதரின் பிரதிநிதியாக வருகை தந்திருந்த கொழும்பு பேராயரான அதிவந்தனைக்குரிய குடேற் ஆண்டகை அவர்கள் மருதமடு அன்னைக்கு முடிசூட்டினார்.** மருதமடு அன்னைக்கு முடிசூட்டியதின் நூற்றாண்டு விழாவை 2024ம் ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதி மடுத்திருப்பதியில் நாம் கொண்டாட இருக்கின்றோம். இதனை முன்னிட்டு கடந்த ஆடி மாதம் 2ம் திகதி மடு அன்னையின் திருத்தலத்தில் சில நிகழ்வுகள் நடைபெற்றது. அத்துடன் வருடம் முழுவதும் மறைமாவட்ட ரீதியாகவும், பங்குகள் ரீதியாகவும் பல நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றது. அத்துடன் விசேட நிகழ்வாக அன்னையின் திருச்சுருபம் எமது பங்குகளுக்குக் கொண்டு வரப்பட உள்ளது. எனவே இவை பற்றிய விளக்கத்தை உங்களுக்குத் தரவிளைகின்றேன். தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் மன்னா பத்திரிகையில் மடு அன்னையின் வரலாறு பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் நீங்கள் வாசித்து அறிந்து கொள்ளலாம்.

**செயல்படுத்தப்பட்ட தீர்மானங்களும் செயல்படுத்தப்பட வேண்டியவைகளும்**

**01** இவ்வருடம் ஆடிமாதம் 2ந் திகதி திருவிழாவின் பின்பு யூபிலி பற்றி ஆயர் அவர்களினால்
பிரகடனம் செய்யப்பட்டது.

**02.** யூபிலிப் பிரகடனத்தின் பின்பு செபமாலை வடிவில் மடு போட்டிக்கோ மண்டபத்தில் பலூன்கள் பறக்க விடப்பட்டது.

**03.** வருடம் முழுவதும் பறக்கக்கூடிய விதமாக போட்டிக்கோ மண்டபத்தில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100அடி உயரக் கம்பத்தில் யூபிலிக் கொடி ஏற்றப்பட்டது.

**04.** மடுத்திருப்பதியில் மடு அன்னையின் வரலாற்றையும், நூற்றாண்டுகளாக நடைபெற்ற மறக்க முடியாத நிகழ்வு களையும், மக்களால் வெளிப்படுத்தப்பட்ட சாட்சியங்களையும், காட்சிப்படுத்த மீயூசியம் ஒன்று கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட உள்ளது,

**05.** யூபிலி மலர் வெளியீடுவதற்கென்று 05 அருட்தந்தையர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**06**. அரசின் அனுமதியுடன் யூபிலியை மையப்படுத்திய முத்திரை வெளியிடுதல்.

**07.** பங்குகளில் முதல் சனிக்கிழமைகளில் மடு அன்னையின் திருச்சுருபத்திற்கு முன்பாக திருச்செபமாலை தியானித்து, திருப்பலி நிறைவேற்றுதல்.

**08.** மன்னாப் பத்திரிகைகளில் மடுத்திருத்தல வரலாறு பற்றி சிறப்புக் கட்டுரைகள் எழுதுதல்.

**09.** மடுமாதா திருச்சுருபத்தை மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளுக்கும் கொண்டு சென்று பங்கின் பிரதான ஆலயத்தில் மக்களின் வணக்கத்துக்காக வைத்திருத்தல்.

**10.** மடு அன்னை பங்கிற்கு வருவதற்கு முதல்நாளில் அனைத்து பங்கு மக்களுக்கும் விசேட ஆயத்த வழிபாடு நடாத்துதல்

**11.** 02.07.2023 - 02.07.2024ற்கு இடைப்பட்ட காலத்தில் ஒருமுறை விரும்பிய ஒருநாளில் பங்குச் சமூகமாக மடுத் திருத்தலம் சென்று வழிபாடுகளிலும், ஏனைய நிகழ்வுகளிலும் பங்குபற்றுதல்,

12. ஆணைக்குழுக்கள் தங்கள் உறுப்பினர்களுடன் ஒருநாள் நிகழ்வுகளை மடுவில் நடாத்துதல்.

13. மன்றக்கோட்ட மட்டத்தில் குடும்பங்களுக்கான சிறப்பு நிகழ்வுகளை மடுவில் நடாத்துதல்

14. மடுத்திருத்தலம் பற்றிய வரலாறு அச்சடித்து, படங்களுடன் மக்களுக்கு திருச்சுரூபம் பங்குகளுக்கு கொண்டு செல்லப்படும் போது வழங்குதல்.

**மருதமடு அன்னையின் பங்குகளுக்கான முதலாவது பயணம்**
**08.10.2023 - 20.10.2023**

08.10.2023 - 09.10.2023 - பேராலயம் - காலை 10.30 - காலை 8.00
09.10.2023 எழுத்தூர் - காலை 8.30 - 4.30 மாலை
09.10.2012 - 10.10.2023 தாழ்வுபாடு மாலை 5.00 - காலை 8.00
10.10.2023 - தோட்டவெளி - காலை 8.30 - மாலை 4.30
10.10.2023 - 11.10.2023 - ஜோசப்வாஸ்நகர் - மாலை 5.00 காலை 8.00
11.10.2023 - சிறுத்தோப்பு - காலை 8.30 - மாலை 4.30
11.10.2023 - 12.10.2023 - பேசாலை - மாலை 5.00 - காலை 8.00
12.10.2023 - கீளியன்குடியிருப்பு - காலை 8.30 - மாலை 4.30
12.10.2023 - 13.10.2023 - தலைமன்னார் - மாலை 5.00 - காலை 8.00
13.10.2023 - சாந்திபுரம் - காலை 9.00 - மாலை 4.30
13.10.2023 - 14.10.2023 - பள்ளிமுனை - மாலை 5.00 - காலை 8.00
14.10.2023 - உயிலங்குளம் - காலை 8.30 - மாலை 4.30
14.10.2023 - 15.10.2023 -வங்காலை - மாலை 5.00 - காலை 8.00
15.10.2023 - வஞ்சியன்குளம் - காலை 8.30 - மாலை 4.30
15.10.2023 - 16.10.2023 - நானாட்டான் - மாலை 5.00 - காலை 8.00
16.10.2023 - கட்டைக்காடு காலை 8.30 - மாலை 4.30
16.10.2023 - 17.10.2023 - முத்தரிப்புத்துறை - மாலை 5.00 - காலை 8.00
17.10.2023 - முள்ளிக்குளம் - காலை 9.00 - மாலை 4.30
17.10.2023 - 18.10.2023 - சிலாவத்துறை - மாலை 5.00 - காலை 8.00
18.10.2023 - சிறுக்கண்டல் - காலை 8.30 - மாலை 4.30
18.10.2023 - 19.10.2023 - முருங்கன் - மாலை 5.00 - காலை 7.00
19.10.2023 - பொன்தீவுகண்டல் - காலை 7.30 - பிற்பகல் 12.00
19.10.2023 - அளவக்கை - பிற்பகல் 12.30 - மாலை 5.30
19.10.2023 - 20.10.2023 - கற்கிடந்தகுளம் - மாலை 6.00 - காலை 7.00
20.10.2023 - கட்டையடம்பன் - காலை 7.30 - பிற்பகல் 1.00
20.10.2023 - மடுறோட் - பிற்பகல் 1.30 - மாலை 5.30
20.10.2023 - மடு - மாலை 6.00

**மருதமடுஅன்னையின் பங்குகளுக்கான இரண்டாவது பயணம்**
**17.01.2024 23.01.2024**

17.01.2024 - குஞ்சுக்குளம் - காலை 9.00 - பிற்பகல் 1.30
17.01.2024 - பெரியகட்டு பிற்பகல் 2.00 - மாலை 5.30
17.01.2024 18.01.2024 - செட்டிகுளம் - மாலை 6.00 - காலை 8.00
18.01.2024 இலுப்பைக்குளம் - காலை 9.00 - மாலை 4.00
18.01.2024 19.01.2024 - வவுனியா மாலை 5.00 - காலை 8.00
19.01.2024 - கோமரசங்குளம் - காலை 9.00 - மாலை 4.00
19.01.2024 - 20.01.2024 - மகாறம்பைக்குளம் - மாலை 5.00 - காலை 7.30
20.01.2024 - கனகராயன்குளம் - காலை 8.30 - மாலை 12.30
20.01.2024 - ஓமந்தை - பிற்பகல் 1.00 - மாலை 5.00
20.01.2024 21.01.2024 தரணிக்குளம் - மாலை 5.30 - காலை 8.00
21.01.2024 - பம்பைமடு - காலை 8.30 - மாலை 4.00
21.01.2024 - 22.01.2024 - வேப்பங்குளம் மாலை 4.30 - காலை 8.00
22.01.2024 - கன்னாட்டி காலை 9.00 மாலை 3.30
22.01.2024 23.01.2024 - பண்டிவிரிச்சான் மாலை 4.30 - காலை 8.00
23.01.2024 - தட்சனாமருதமடு - காலை 9.00 - மாலை 4.00
23.01.2024 - மடு - மாலை 5.00

**மருதமடு அன்னையின் பங்குகளுக்கான மூன்றாவது பயணம்**
**02.04.2024 30.04.2024**

02.04.2024 - பறப்பாங்கண்டல் - காலை 9.30 - மாலை 4.00
02.04.2024 - 03.04.2024 - காத்தான்குளம் - மாலை 4.30 காலை 8.00
03.04.2024 - ஆட்காட்டிவெளி - காலை 8.30 - மாலை 4.00
03.04.2024 -04.04.2024 - அடம்பன் - மாலை 4.30 - காலை 8.00
04.04.2024 - மாந்தை - காலை 8.30 - மாலை 4.00
04.04.2024 - 05.04.2024 - விடத்தல்தீவு - மாலை 4.30 - காலை 8.00
05.04.2024 - அந்தோனியார்புரம் - காலை 8.30 - மாலை 4.00
05.04.2024 - 06.04.2024 - தேவன்பிட்டி - மாலை 4.30 - காலை 8.00

**அருட்பணி. P.கிறிஸ்துநாயகம் அடிகளார்,**
**குருமுதல்வர்,**
**மன்னார் மறைமாவட்டம்.**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.242
## சீராக் 31 - 51 வரை

உங்கள் விடைகளை புரட்டாதி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 02 | | | | 03 | | |
| | ✸ | | 04 | | | | | | |
| | 05 | | | | | | | | |
| | | 06 | | | 07 | 08 | | 09 | 10 |
| | 11 | ✸ | | 12 | 13 | | 14 | | 15 |
| | | 16 | | | 17 | | 18 | | |
| 19 | | | | | | | | 20 | |
| | 21 | | | | | | | | 22 |
| 23 | | ✸ | | | | | 24 | ✸ | |
| | 25 | | 26 | 27 | | 28 | | | |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. உமக்காகப் பொறுமையுடன் காத்திருப்போருக்கு .............. அளியும்.
2. ................. மீதுள்ள விழிப்பு உடலை நலியச் செய்கிறது.
4. .............................. அரசு இரண்டாக உடைந்தது.
5. அவர்கள் ................... துயில் எழுகிறார்கள்.
14. அதனால்தான் எல்லாக் ........... களினின்றும் நீர் வடிகிறது.
16. எல்லா நீர்நிலைகளிலும் வளரும் ............... புல்__பிடுங்கி எறியப்படும்.
19. ................... யாழும் இன்னிசை எழுப்புகின்றன.
21. ................... பெயரால் உரைக்கப்பட்ட இறைவாக்குகளை நிறைவேற்றும்.
23. .......................... படைகளுக்கு அடையாள__வெளியில் அது மிளிர்கின்றது.
13. நுகமும் கடிவாளமும் ............................. யின் கழுத்தை வளைக்கின்றன.
28. .................. வாழும் மிகப்பெரிய விலங்குகளும் உள்ளன.

### வலமிருந்து இடம்

7. உங்கள் ................... தந்தையர் நாணம்__கொள்ளுங்கள்.
12. கருஞ்சிவப்பு உடையும் ................... முடியும் அணிந்தோர் முதல்__வரை.
15. தன்னுடைய ஒளிக்கதிர்களால் .............க் குருடாக்குகிறது.
17. வான ..................... லைப்பார் அதை உண்டாக்கினவரைப் போற்று.
20. .................புரியக்கூடிய__ தீமை புரியாமல் விட்டவர யார்?
26. அநீதியைக் கைவிடுதல் பாவக் ...................ப் பலியாகும்.
18. கட்டளைகளை மீறுவோர் ................... முடிவில் அழிவர்.
22. .................. தேனும்__அழைத்து வந்தனர்.

### மேலிருந்து கீழ்

1. அங்கே விந்தையான, வியப்புக்குரிய .................. உள்ளன.
3. அவருடைய சொல்லால் தண்ணீர் ................... நின்றது.
9. ஒரு ................... விட மற்றொருத்தி__தோன்றுவாள்.
11. இவ்வாறு அந்த நாடு அவருடைய ................ வலிமையை அறிந்துகொண்டது.
4. உன்னத ................... திருமுன் மன்றாடுவர்.
19. ஆண்டவருக்குப் பணி செய்யவும் ................... ஊழியம் புரியவும்__இவ்வாறு செய்தார்.
10. நறுமணம் வீசுங்கள் ................... பாடுங்கள்.
21. ................... உழைப்பின் முதற்கனிகளைக்__பார்க்காதே.
23. ................... திறந்து வேண்டுவர். தங்கள்__மன்றாடுவர்.
17. அவற்றை அழகு செய்வதில் ................... இருக்கிறார்கள்.

### கீழிருந்து மேல்

6. ஓனியாவின் ................... சீமோன்__திகழ்ந்தார்.
8. உன் உழைப்பின் முதல் ............... களைக் கொடுப்பதில் கணக்குப் பார்க்காதே.
9. ................... அழகு அவளுடைய__மகிழ்விக்கும்.
10. தன்னிறைவு கொண்டோர் தொழில் ............................. ஆகியோருடைய__இனிமையானது.
11. நீதிமான்களின் ................... ஏற்றுக்கொள்ளத்தக்கது.
13. நாம் ................... கேட்டு வியப்படைகிறோம்.
18. கொடை வழங்கும் போதெல்லாம் ............. மலர்ச்சியோடு கொடு.
24. தம் நாள்களில் அவர் ................... விடுவிப்பாராக.
25. ................... வெளியில் அது மிளிர்கின்றது.
26. திராட்சை மலரும் காலத்திலிருந்து ................ காலம் வரை__ இன்புற்றிருந்தது.
27. திராட்சை இரசம் பரிமாறப்படும் ................... உனக்கு கொள்ளாதே.
28. அடக்கமற்ற மகள்மேல் ................... கருத்துமாய் இரு.

# சிங்கமும் சின்ன மான்குட்டியும் (சிறுகதை)

அதுவொரு அழகான காலைவேளை ஒளிர்கதிர்கள் பிரகாசித்து கொண்டு இருந்தன அதனுடைய வெளிச்சம் மெல்ல அடிவானத்திலிருந்து எழுந்தது. அதுதான் காட்டில் நித்திரை விட்டெழும் காலை சூரியனை வரவேற்றன. ஒரு புதிய நாளும் பிறந்தது அந்த புதிய நாளும் வந்தது அது ஒரு பெரிய காடு அந்த காட்டின் பற்றை செடியின் கீழ் அழகான மான் குட்டியும் நித்திரை செய்து தன் கால்களை நீட்டி புரண்டு புரண்டு எழும்பியது. அதிகாலை வேளையிலே சூடான இதமான காற்றை சுவாசித்தது பின்னர் தன் காட்டிலே வளமை போல உணவு தேட புறப்பட்டது. அந்த காட்டிலே மரங்களும், செடிகளும், பூக்களும் நிறைந்து நின்றது. அவை நிழலையும், குளிர்ச்சியையும் தந்தன அந்த இயற்கையையும் அந்த மான்குட்டி இரசித்தது. மரங்களிலும் அழகான பூக்கள் பூத்திருந்தன. அப்பூக்களில் இருந்து கமகம என வாசம் வீசியது அந்த வாசனை எல்லோரையும் களிப்பூட்டியது. அப்பொழுது பெரிதாக சிங்கத்தின் கர்ச்சனை கேட்டது. அப்பொழுது வேட்டைக்கு சென்று மனிதர்கள் விரித்த வலையில் சிங்கம் அகப்பட்டது. அப்பொழுது குட்டிமான் சிறிய பயத்துடன் வந்தது. சிங்கம் குட்டிமானிடம் நீ எனக்கு உதவ வேண்டும்.

உன்னால் தான் முடியும் என்றது மான்குட்டி சற்றும் யோசிக்காமல் தனது சிறிய பற்களால் வேடர்களின் வலையை சிறிது சிறிதாக முயற்சி செய்து அறுத்தது. பின்னர் சிங்கம் மெதுவாக வலையில் இருந்து களைப்புடன் வந்தது. அப்பொழுது சிங்கம் கேட்டது என் செல்ல மகனே உனக்கு கொஞ்சம்கூட பயமில்லையா என்று மகா ராசாவே உங்களுக்கு பயமில்லாமல் இருக்க முடியும்மா? என்று பதில் கூறியது. மான்குட்டியின் துணிச்சலைப் பார்த்து வியந்தது. நீங்கள் துன்பத்தில் இருந்தீர்கள் பிறர்உதவி கிடைக்காதா? என்று ஏங்கிக்கொண்டு இருந்தீர்கள். நான் அதனைக் கண்டு உதவி செய்யாமல் கடந்து செல்ல விரும்பவில்லை. நான் நன்மையே செய்ய விரும்பும் பிராணி. எனவே எனக்கு பயமும் ஆபத்தும் தடையாக மாட்டா என்றது.

மான் குட்டியே நீ ஒரு வீரன் கள்ளம் கபடம் இல்லாதவன் சிறிய மிருகங்களும் பெரிய மிருகங்களும் இப்பாதையால் என்னைக் கடந்து சென்றது. வேறு சில மிருகங்களும் என்னை பார்த்து ஏளனமாக கேலி செய்தன. எனக்கு எரிச்சலையும் கோபத்தையும் உண்டாக்கின என்று சிங்கம் கவலையுடன் கூறியது. மகாராசாவே நான் சொல்வதை கொஞ்சம் கேளுங்கள் என்றது. பிறருக்கு தீங்கு செய்பவனாகவே வாழ்ந்து விட்டேன் மிருகங்களை கொன்று தின்பவனாக வாழ்ந்து விட்டேன் நான் தான் பெரியவன் என்று தலைக்கணம் ஏறி வாழ்ந்து விட்டேன் எல்லா மிருகங்களும் ஒன்றுபட்டால் எனது முடிவென்ன. இதனைப் பற்றி சிந்திக்காமல் தலைக் -கணத்துடன் வாழ்ந்து விட்டேன்.



ஒருவனுடைய செயல்களின் பலனாக அவன் நன்மை தீமைகளை அனுபவிப்பான் இது சிலவேளை காலம் தாழ்த்தியும் நிகழலாம் இந்த உண்மையை சற்று சிந்தித்துப் பாருங்கள் என்று மான்குட்டி கூறியது. சிங்கம் மான் குட்டியின் பேச்சை கேட்டது. நீ வீரன் மட்டும் அல்ல மிகவும் அறிவாளி என்று பெருமை கொண்டது. நீ என்னை விடுதலை செய்தாய், நல்ல அறிவையும் கற்றுத் தந்தாய் என்று சிங்கம் மான்குட்டியிடம் கூறியது. நான் இந்த பெரிய காட்டை விட்டு மலையகம் செல்கின்றேன். எனது முகவரியை தருகின்றேன் முடிந்தால் என்னை வந்து சந்தியுங்கள் என்று கூறி முத்தமிட்டு மான் குட்டியை விட்டு பிரிந்து சென்றது.

**நீதி:** நான்தான் பெரியவன் நீ தாழ்ந்தவன் என்று வாழாமல் சகலரும் சுகமாக வாழலாம் என்பதை எல்லா மிருகங்களும் சொல்லி கொடுத்தன. அவையும் ஆர்வமாக கற்றுக் கொண்டன.

**J. யோண் பெகியோ (தரம் - 5)**
**சுண்டிக்குளி, முருங்கன்.**

**விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 240 சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ஜெயசீலன் மெடோனா
தவலந்தனபங்கு, நுவரெலியா.

**இரண்டாம் பரிசு:**
A. சுகணராஜ்
தேவன்பிட்டி

**மூன்றாம் பரிசு:**
A. ஜெயக்குமார் அபர்ணா
தோட்டவெளிபங்கு

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 44 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 43 பேர்.**

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.240ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்**

1. நி. நிஸ்ரின் பெனாண்டோ - முத்தரிப்புத்துறைபங்கு
2. நி.நியோவின் பெனாண்டோ - முத்தரிப்புத்துறைபங்கு
3. சந்தியோகு போல்றொபின்சன் - உயிலங்குளம்பங்கு
4. வின்சன் யோகவதி - உயிலங்குளம்பங்கு
5. அன்ரன் ஜெயக்குமார் அபிசான் - தோட்டவெளிபங்கு
6. A.P. குணாளன் மெக்ஸ்வெல் - அளவக்கைபங்கு.
7. அ. குணாளன் அபினாஷ் - அளவக்கைபங்கு.
8. N. லிகாரா - கீரி
9. ம. நெரோஜன் - கீரி
10. யேசுநேசன் தர்சினி - திருநாவற்குளம்
11. யோ. யூடிற் டலிமா - வங்காலைபங்கு
12. F. சுமித்ரா - மூன்றாம்பிட்டி.
13. அ. அமல அபின்ஷா - தேவன்பிட்டி
14. A. அமிரா - தேவன்பிட்டி.
15. A. சுகன்யா - தேவன்பிட்டி.
16. A. பார்த்தீபன் - தேவன்பிட்டி.
17. சாந்தன் சாலிக்கா - கட்டைக்காடுபங்கு
18. ச. ஜஸ்மின்கசில் - மடுக்கரை
19. T.S. லீலாவதி - சாந்திபுரம்.
20. பிறிற்றோ தாருஷா - சாந்திபுரம்.
21. அகுஸ்தீன். இசக்கியேல் - யோசப்வாஸ் நகர்.
22. S. ஆன் றெபேக்கா - எமில்நகர்.
23. S. ஆன் தெபோறா - எமில்நகர
24. L. றியான் சட்விக் - எமில்நகர்.
25. J. சாரா - எமில்நகர்.
26. S. நோபிள் - எமில்நகர்.
27. R. டிலான் - பெற்றா.
28. J.T. மிறோன் றோச் - பள்ளிமுனை மேற்கு.
29. டா. மேரி யோசேப்பின் - பள்ளிமுனை கிழக்கு.
30. ரவிசங்கர் சறோஜினி - ஜோசேவ்வாஸ் நகர்.
31. வி. கிறிஸ்ரி திவ்வியன்
32. ஆன் ஸ்ரேசி றூபறாஜ் - பள்ளிமுனை.
33. R. ஜெகநாதன் - மடுக்கரை.
34. எமி றொபின்சன் பிகிறாடோ - பள்ளிமுனை கிழக்கு
35. லிவி றொபின்சன் பிகிறாடோ - பள்ளிமுனை கிழக்கு.
36. றேச்சல் தேவநேசன் - பள்ளிமுனை மேற்கு.
37. ரேறியன் யூட் தேவநேசன் - பள்ளிமுனை மேற்கு.
38. T. சுயாந்தினி - மன்னார்
39. அ. ஜஸ்மின் ஷறோன் - ஆவணம்.
40. திலீபன் திவிசாளினி - பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.

# திருவிவிலியத்தில் அன்னை மரியா பற்றி

புதிய ஏற்பாட்டில் 25 இடங்களில் "அன்னை' என்றும், லூக்கா நற்செய்தியில் எலிசபெத்து வாயிலாக "ஆண்டவரின் தாய்" (லூக் 1:43) என்றும் கன்னி மரியா அழைக்கப் படுகின்றார். இயேசுவின் மனுவுருவை, இறைமனிதப் பிறப்பை நிரூபிக்கும் ஆதாரமாக மரியாவின் தாய்மை உள்ளது. மேலும் கலாத்தியருக்கு எழுதிய திருமடலில், "காலம் நிறைவேறிய போது திருச்சட்டத்திற்கு உட்படிருந்த நம்மை மீட்டு, தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்ட -வராகவும் அனுப்பினார்" (கலா 4:4) என்று திருத்தூதர் பவுல் கூறுவதன் வாயிலாக நாசரேத்தூர் இயேசுவின் மறை உண்மைகளை விளக்குகின்றார்.

**நான்கு நற்செய்தியாளர்களும் மரியாவின் தெய்வீகத் தாய்மையைப் பற்றிப் பேசுகின்றனர்.**

தெய்வத்தின் பிறப்பை தெய்வீகத் தாயின்றி எப்படி அறிவிக்க முடியும்? (மத் 13:55 மாற் 6:3 யோவா 6:42) லூக்கா நற்செய்தியில் எலிசபெத்தைச் சந்திக்கும் மரியா, பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைப் பேழையின் (வி.ப. 40:34) புதிய உருவகமாகக் காட்டப்படுகின்றார். பழைய ஏற்பாட்டில் தன்னை நோக்கி இறைவனின் உடன்படிக்கைப் பேழை கொண்டு வரப்பட்ட போது தாவீது அரசர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்ததைப் போல, அன்னை மரியாள் எலிசபெத்தைத் தேடிச் சென்று வாழ்த்துக் கூறியபோது எலிசபெத்தின் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. நான்கு நற்செய்திகளிலும் அன்னைப் பற்றிய செய்திகள் அனைத்தும் "இயேசு கிறிஸ்துவின் மனுவுரு" என்னும் மாபெரும் உண்மையைச் சொல்வதற்காகவே தரப்பட்ட செய்திகள்.

# மன்னா

## அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



மன்னார், மடு, பெரியகுஞ்சுக் குளத்தை சேர்ந்த கிறிஸ்தோகு பெனடிற் கடந்த 12.09.2023 அன்று மன்னார ' மாவட்ட நீதிபதி முன்நிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இவர் கடந்த யுத்தகாலத்தின் போது சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தில் இணைந்து பல சமூகப் பணிகளை செய்துள்ளார். தற்பொழுது கிராம அலுவலராக மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல இடங்களில் சிறப்பாக கடமையாற்றி வருகின்றார்.

மும்மொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியரும் ஆவார். கலையில் பெரும் ஈடுபாடுள்ள இவர் "சிரசு" என்னும் நாடக நூலினையும் தாவீது எனும் வாசாப்பினையும் எழுதியுள்ளார். இதனால் மன் இளம்கலைச் சுரபி எனும் விருதினையும் பெற்றுள்ளார். இவரது சேவை சிறக்க வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

# நினைவு கூருகின்றோம்..!

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"பணிவோடு பணிசெய்த பணிவிடைக்காரன்"



அமரர்.
அருட்பணி அவுலின்
இராயப்பு

மண்ணில் : 06.05.1956
இறைபணியில்: 30.07.1985
விண்ணில் : 24.09.2022


இராயப்பு என்ற பெயர் கொண்டதால், பாறை போன்று
இறுக்கமான இறைபணி வாழ்வின் இலக்கணமாகிய புனித,
இனிய குரு, கறையற்ற மெல்லிய தென்றலாய்,
காருண்ணிய வார்த்தை கொண்டு, மனித மனங்களை வருடிய
வைகறைப் புன்னகை, பாறையான உம் பெயரின் மறைபொருளில்,
எம் குடும்பத்தை கட்டி நாம் அழகு பார்த்தோம்.
எம் துன்ப வேளையில் தந்தையாய், தனையனாய் தாங்கி
நீ நின்றாய் நாம் சோர்ந்து விடாமல், ஓய்வின்றி உம் பணி வாழ்வில்
உழைத்து விட்டு இன்று நீ ஓவியமாக வாழ்கின்றாய் எம் இதயங்களில்.
உம் விண்ணக பிறப்பின் ஓராண்டில் மண்ணகம் புதுபிக்கப்படுகின்றது.
விண்ணக புனிதர்களில் ஒன்றாகிட உங்களுக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

உம் நினைவால் வாழும்:
சகோதரங்கள், உற்றார், உறவுகள்.

## 2ம் ஆண்டு நினைவு

"வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம், இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்"

அமரர். ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் சேவியர் (பொன்னு)



மண்ணில்: 04.04.1942
விண்ணில்: 25.09.2021

அப்பா நீங்கள் எங்களை விட்டுச்சென்று
இரண்டு ஆண்டு முடிந்து விட்டது அப்பா
இன்னும் ஆறவில்லை எமது கவலை ஓயவில்லை அப்பா
எமது கண்ணீர். அப்பா எப்போதும் அமைதியாகவே
சென்று விட்டீர்களே அப்பா! எம்மைவிட்டும்
அமைதியாகவே சென்று விட்டீர்களே அப்பா!
நாங்கள் அமைதி இன்றித் தவிக்கின்றோம் அப்பா!
எப்ப அப்பா எங்களைப் பார்க்க வருவீர்கள்
உங்கள் வரவிற்காக வழிமேல் விழி வைத்துக்
காத்துக்கொண்டு இருக்கின்றோம் அப்பா!
அப்பா உங்கள் ஆன்மா இறைவனின் அமைதியில்
இன்புற்றிருக்க கண்ணீருடன் இரஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவு

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் இருக்கின்றது" (சா.ஞா 3:1)

தோற்றம்
06
11
1940



மறைவு
25
09
2022

அமரர். மரியதாசன் சூசையம்மாள் கூஞ்சு
தலைமன்னார் மேற்கு

அன்புள்ள அம்மா ஆண்டொன்று நகர்ந்து விட்டாலும், உங்கள் பாச நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை. உங்கள் அன்பு முகம் மறைந்தாலும் என்றும் மறையாத உங்கள் நினைவுகளை எம்முடன் நினைத்துக்கொண்டு வாழ்கின்றோம் எங்களுக்காகவே வாழ்ந்து மறைந்த உங்கள் அன்புக்கு நன்றியோடு இறைவனின் தூயசந்நிதியில் நீங்கள் அமைதியில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: மகள், மருமகள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 17ம் ஆண்டு நினைவு

"ஆண்டவரது இல்லத்திற்கு போவோம்" (தி.பா 122:1)

மலர்வு
17
05
1958



உதிர்வு
28
10
2006

ஞானப்பிரகாசம் அமிர்தநாதன் (அமுதம்)
இல 114, மில்வீதி, வவுனியா

குறுகியகால வாழ்க்கை அநுபவங்களோ பலதும் பத்தும்.
நெறிப்படுத்தும் ஆற்றல், கல்வி, செல்வம், பட்டம்,பதவி,
சொத்துக்களுக்கு சொந்தக்காரனாக இல்லாவிட்டாலும்
பல மனித மனங்களின் சொந்தக்காரன் மண்ணில்
வாழ்ந்து முடிந்தாலும் பெயர் சொல்லுமளவான
வாழ்க்கை இது போதும் அப்பா...
இறைவன் தோட்டத்தில் எம்மவர்க்காய் வேண்டிடுங்கள்

என்றும் நினைவில்: குடும்பத்தார்

## 31ம் நாள் நினைவு

மண்ணில்
1996
06
06



மண்ணில்
2023
08
13

அமரர். ஜெகநாதன் டிறோன்

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று
இன்று காணாமல் போனதெங்கே?
உன் புன்சிரிப்பான பூ முகம் பூமியில் இனி வருமோ
நாங்கள் தவிக்கின்றோம் தவிப்பை யார் துடைப்பார்...
காலம் ஏன் எம்முடன் உன்னை கனதூரம் கொண்டு
செல்லவில்லை, பாதி வழியில் விட்டு சென்றதனால்
ஆறாத மனத்துயரில் பரிதவித்து துடிக்கின்றோம்,
சோகம் நிலையில்லை சொர்க்கம் உனக்காக

பிரிவால் துயருறும்: கலையருவி நிர்வாகம்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.